Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 154

சனிக்கிழமை 29 ஏப்ரல் 2023

சித்திரை 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## முதியவரை அடித்துக்கொன்று நகைகள், பணம் கொள்ளை!

முல்லைத்தீவில் பயங்கரம்



முல்லைத்தீவு, ஏப். 29
முல்லைத்தீவு, சிலாவத்தையில் முதியவரைக் கொலை செய்து அவரது வீட்டிலிருந்த 15 பவுண் நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணம் என்பன நேற்று அதிகாலை கொள்ளையிடப்பட்டுள்ளன. »11

## விடுதலை கிடைத்தும் இன்னும் சிறை வாழ்வே!

ராஜீவ் கொலைவழக்கில் விடுதலையான இலங்கையர்களுக்கே இந்தக்கதி



சென்னை, ஏப். 29
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, அண்மையில் நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் பொதுமன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்ட ஏழு பேரில், இலங்கையர்களான றொபேட் பயஸ், ஜெயக்குமார், முருகன், சாந்தன் ஆகியோர், சிறையைவிடவும் மோசமான வகையில் நடத்தப்படுகின்ற »11

உள்ளகப் பொறிமுறைகள் மூலமாக

# காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வாம்

யாழில் வைத்து சாகல தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 29**

**இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் விரைவில் தீர்வொன்று பெற்றுக்கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலக பணிக்குழாமின் தலைவரான சாகல ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.** »11

## பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கலந்துரையாட அரசு தயார்!

பணிந்தார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஏப். 29
பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது. எனவே, கலந்துரையாடல்களின் பின்னர் உரிய திருத்தங்கள் சகிதமே அந்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் »10

## நாணய நிதிய ஏற்பாடுகள்; நாடாளுமன்றம் அனுமதி!

கொழும்பு, ஏப். 29
சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. »11

## சிவராம், ரஜிவர்மன் நினைவுநாள் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 29
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜிவர்மன் ஆகியோரின் நினைவுதினம் யாழ். ஊடக அமையத்தில் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. »11

வவு. வெடுக்குநாறிமலையில்

## தொல்பொருள் திணைக்களம் நேற்று மீண்டும் அத்துமீறல்!

பொலிஸாரும் கெடுபிடி

வவுனியா, ஏப். 29
வெடுக்குநாறிமலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நேற்றையதினம் புதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட நிலையில், அதற்கு தொல்பொருள் திணைக்களத்தினர் தடைகளை ஏற்படுத்த முயற்சித்துள்ளனர்.
விக்கிரகங்கள் மீள்பிரதிஷ்டை செய்வதைக் கண்காணிப்பதற்காக பொலிஸாரும் தொல்பொருள் திணைக்களத்தினரும் நேற்று வெடுக்குநாறி மலைப் பகுதிக்கு வந்திருந்தனர். அவர்கள் »11

## ஈழத்தமிழர்களுக்குத் தீர்வு; ஜீரணிக்கக் கடினமானதா?

மலேசியாவின் பினாங் மாநில துணைமுதல்வர் கேள்வி



கொழும்பு, ஏப். 29
இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்கான கண்ணியமான ஜனநாயகத் தீர்வு என்பது ஜீரணிக்கக் கடினமான ஒன்றா? என்று மலேசியாவின் பினாங் மாநிலத்தின் துணை முதல்வர் »11



## வெடுக்குநாறிமலையில் மீண்டும் ஆதிசிவன்!

விக்கிரகங்கள் நேற்றுப் பிரதிஷ்டை

வவுனியா, ஏப். 29
நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் நேற்று மீள்பிரதிஷ்டை செய்யப்பட்டன.
வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர் மலையில் விகாரை

# களநிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளார் நீதிபதி

**முல்லைத்தீவு, ஏப். 29**

**முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி புத்த விகாரை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றனவா? என்பதனைக் கண்டறிய முல்லைத்தீவு நீதிவான் நேரடியாகச் சென்று ஆராயவுள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பிலுள்ள குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என ஆலயத்தின் சார்பில் கடந்த மார்ச் மாதம் நீதிமன்றில் முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டது. இதன்போது நீதிமன்றக் கட்டளையை மீறி கட்டுமானப் பணிகள் எவையும் நடக்கவில்லை எனத் தொல்பொருள் திணைக்களம் மற்றும் அரச சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

இதனை ஆலயத் தரப்பு சட்டத்தரணிகள் எதிர்த்து வாதாடினர். விவாதம் பல மணிநேரம் நீண்டது.

இறுதியில் முல்லைத்தீவு நீதிவான் நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர் மலைக்கு நேரடியாகச் சென்று களநிலைமைகளை பார்வையிட்ட பின் கட்டளையிடுவார் என உத்தரவிடப்பட்டது. அதற்கென வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது. (ச)

## வலய அதிகாரிகளுடன் தர்க்கம் அதிபர் மருத்துவமனையில்

மன்னார் வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள், மன்னாரிலுள்ள பாடசாலையொன்றுக்குச் சென்று அங்குள்ள அதிபருடன் தர்க்கப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து அதிபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட எழுத்தூர்ப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு, மன்னார் வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் மூவர் அண்மையில் சென்றனர்.

பாடசாலையில் இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராயவுள்ளதாகத் தெரிவித்து தரம் 11 வகுப்பறைக்குச் சென்றனர். வகுப்பறையில் பாடம் புகட்டிய ஆசிரியர் ஒருவரை வெளியேற்றினர். பின்னர் அங்கு சென்ற அதிபரையும் வெளியேறுமாறு கூறினர். அதன்போது நான் (அதிபர்) ஏன் வெளியேற வேண்டும். நீங்கள் வெளியேறுங்கள் என அதிபர் கூறியுள்ளார். இதனால் அதிபருக்கும், வலயக் கல்வி அதிகாரிகளுக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து அதிபர் அங்கிருந்து சென்று அதிபர் அலுவலகத்தில் கடமைகளை மேற்கொண்டுள்ளார். அதிகாரிகள் அதிபர் அலுவலகத்துக்குச் சென்று கற்றல் நடவடிக்கை ஆவணங்களைக் கோரியுள்ளனர். இதனால் அதிபர் உள ரீதியாக பாதிப்படைந்துள்ளார். தனக்கு உடல் ரீதியாக உபாதை ஏற்படுவதை அறிந்து கொண்ட அதிபர் பாடசாலை லொக்கர் புத்தகத்தில் பதில் அதிபருக்குக் கடமையை தற்காலிக பொறுப்புக் கொடுத்து எழுதி விட்டு மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை பாடசாலைக்குச் சென்ற வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள் மூவரில் ஒருவரின் மனைவியை அந்தப் பாடசாலைக்கு அதிபராக நியமனம் செய்ய முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும், அதன் காரணமாகவே தொடர்ச்சியாக அதிபருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் குறித்த பாடசாலை அதிபருடன் உதயன் தொடர்புகொண்டபோது, மேற்கூறப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது என்பதை உறுதிப்படுத்தினார்.

அதனையடுத்து மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, வலயக் கல்வி அதிகாரிகள் க.பொத. சாதாரணதர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காகவே அங்கு சென்றனர். அத்துடன் அதிகாரியின் மனைவிக்கு ஏற்கனவே மாகாணத் திணைக்களத்தால் வேறொரு பாடசாலையில் பதில் அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானதாகும் - என்றார். (ஒ-14-56)

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஏப். 29

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவ ஏற்பாடு தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல், முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்டச்செயலர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் மே மாதம் 22ஆம் திகதி பாக்குத் தெண்டலும், 29 ஆம் திகதி தீர்த்தமும், ஜூன் மாதம் 5ஆம் திகதி வருடாந்த பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளது.

இதில் உற்சவ காலத்துக்குத் தேவையான ஆலய வளாகத்தைச் சூழவுள்ள வீதிகள் புனரமைப்பு, ஆலய வளாக தூய்மைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களோடு ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களுக்காக சுகாதாரம், குடிதண்ணீர், போக்குவரத்து வசதி, மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலில் ஆலய பரிபாலன சபையினரும் ஆலய உற்சவத்துக்கு வருடா வருடம் உதவிபுரியும் ஏனைய திணைக்களத்தினரும் கலந்துகொண்டனர். (ஒ-14-19)



## திருமலையில் சிதைக்கப்படும் தமிழ் – பௌத்த எச்சங்கள்

திருகோணமலை, ஏப். 29

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் தமிழ் - பௌத்த எச்சங்கள் கவனிப்பாரற்று சிதைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் குமரன்கடவை எனும் தமிழ்ப் பிரதேசம் தற்பொழுது சிங்கள மயப்படுத்தப்பட்டு 'கோமாரகடவல' என்று அழைக்கப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தின் மயிலங்குளத்தில் சுமார் 15 தமிழ் குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன. இந்தக் கிராமத்தையும் 'மயிலவேவ' என்று அழைக்கின்றனர். இந்தப் பகுதியில் தமிழ் கல்வெட்டுடன் கூடிய தமிழ் - பௌத்த எச்சங்கள் காணப்படுகின்றன.

ஒரு வாரத்துக்கு முன்பதாக தமிழ் - பௌத்த எச்சமாக விளங்கிய விகாரை சேதப்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள தமிழ் - பௌத்த சின்னங்கள் கூட தொல்பொருள் திணைக்களத்தால் பாதுகாக்கப்படாத நிலைமையே காணப்படுகின்றது. (ஒ-125)

## முல்லை. மாவட்டச் செயலகத்தில் வளிமண்டல கண்காணிப்புக் கருவி

முல்லைத்தீவு, ஏப். 29

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் வளிமண்டல மாசடைவைக் கண்காணிக்கும் கருவி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொருத்தப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் மாவட்டங்கள் தோறும் வளி மண்டல மாசடைவைக் கண்காணிக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாகவே முல்லைத்தீவின் காற்று மாசடைவை அளவிடும் கருவி, மாவட்டச் செயலக வளாகத்தில் பேராதனைப் பல்கலைக்கழக தொழில்நுட்பக் குழுவால் பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

இந்தக் கருவி ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் வளி மாசடைவு அளவீட்டை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கட்டுப்பாட்டு மையத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-19)

## பயன்தரு தென்னைகளை அழித்த காட்டுயானைகள்

### மக்கள் கவலை



கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் 50க்கு மேற்பட்ட பயன்தரு தென்னைமரங்களை காட்டு யானைகள் அடியோடு அழித்துள்ளன என்று அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இரணைமடு காட்டுப்பகுதியிலுள்ள காட்டு யானைகளே, வட்டக்கச்சி கட்சன் வீதியில் உள்ள மக்களின் குடியிருப்புக்குள் இரவு நுழைந்து பயன்தரு தென்னைமரங்களை அடியோடு அழித்துள்ளன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் காட்டு யானைகள் நுழைந்து தாக்கியதில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரும் காட்டுயானைகள் தாக்கி ஒருவர் காயமடைந்தார் என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். அன்று முதல் இன்று வரை தாம் தொடர்ந்தும் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்குள்ளாவதாகவும், பெரும் பாதிப்புக்களை சந்திப்பதாகவும் தெரிவித்த மக்கள், தமது பகுதிக்குள் காட்டு யானைகள் உள் நுழையாத வகையில் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் யானைகளால் ஏற்பட்ட அழிவை சீர் செய்வதற்கான நட்டஈட்டைப் பெற்றுத்தருவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (ஒ-14-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக வீடுகளுமின்றி மரங்களின் கீழே தஞ்சம்

## தருமபுரத்தில் அவலம்

**கிளிநொச்சி, ஏப். 29**

**நிரந்தர வீடோ அல்லது தற்காலிக கொட்டிலோ எதுவுமின்றி மரங்களின் கீழ் சமைத்து, அயல்வீடுகளில் படுத்துறங்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில், கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் 2017 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகளுக்கு அத்திபாரம் மாத்திரமே போடப்பட்டு கட்டி முடிக்கப்படாத நிலையில் கைவிடப்பட்டன. தற்காலிக கொட்டில்களில் வசித்து வந்த நிலையில் கடந்த வருடம் ஏற்பட்ட கடும் மழை காரணமாக தற்காலிக கொட்டில்களும் இல்லாமலாக்கப்பட்டது. தற்போதைய கட்டடப் பொருள்களின் விலை அதிகரிப்பால் தற்காலிக வீட்டையேனும் சீரமைக்க முடியாதுள்ளது. அதனால் மரங்களின் கீழேயே தஞ்சம் புகுந்துள்ளோம்.

மின்சாரம் இன்மை, விஷஜந்துகள், பூச்சிகள் அச்சம் உள்ளிட்ட இடர்நிலையை எதிர்நோக்கி சிறுவர்களுடன் நாளாந்தம் வாழ்வைக் கழிக்கின்றோம். நாம் எதிர் நோக்கும் இந்த அவல நிலையை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்து தீர்வைப் பெற்றுத்தர வழிவகை செய்ய வேண்டும் - என்றனர். (ச-113)

## வெடிக்காத நிலையில் குண்டு: முறையிட்டும் அகற்றவில்லை!

கிளிநொச்சி, ஏப். 29

வீடொன்றில் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று இனங்காணப்பட்டு கிராமஅலுவலர் ஊடாக பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கியும் இது வரையில் குண்டு அகற்றப்படவில்லை.

விவேகானந்தாநகர்ப் பகுதியில் குடியிருப்பதற்கு நிரந்தர வீடொன்றை அமைக்க வீட்டார் அண்மையில் பணிகளை ஆரம்பித்தனர். ஆரம்பகட்டமாக அத்திபாரம் வெட்டும்போது அங்கு வெடிக்காத நிலையில் குண்டு ஒன்று இனங்காணப்பட்டது. கிராமஅலுவலர் ஊடாக பொலிஸார் உள்ளிட்ட தரப்பினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், முறைப்பாட்டையும் பெற்றுள்ளனர். விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர், கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் நிறுவனத்தினர் எனப் பல தரப்பும் சென்று குண்டை பார்வையிட்டனர். ஆயினும் இன்று வரை குண்டு அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் கவனத்தில்கொண்டு, பாதுகாப்பான முறையில் குண்டை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14)

## வவுனியாவில் பசுவைத் திருடி இறைச்சியாக்கிய விஷமிகள்

வவுனியா, ஏப். 29

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வீரங்குளத்தில் சட்டவிரோதமாக பசுமாடு ஒன்று இறைச்சியாக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் கட்டிவைக்கப்பட்ட பசுமாட்டைக் காணாத நிலையில் மாட்டின் உரிமையாளர் தேடியபோது வெற்றுக்காணியொன்றில் இறைச்சிக்காக வெட்டப்பட்டமை கண்டறியப்பட்டது. இதுதொடர்பாக உரிமையாளர், சிதம்பரபுரம் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-110)

## வீடுடைத்து நகை திருட்டு சந்தேகநபர் கைதானார்!

### நகைகளும் மீட்பு

மல்லாகத்தில் பட்டப்பகலில் வீடுடைத்து நகைகளைத் திருடிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த தெல்லிப்பழைப் பொலிஸார், ஏழாலை - மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபரைக் கைது செய்தனர். அத்துடன் திருடப்பட்ட நகைகளும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14, 26, 125)

## துணுக்காய் மாணவர்கள் தொடர்ந்தும் அந்தரிப்பு!

### *மனிதஉரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தலும் புறக்கணிப்பு*

**முல்லைத்தீவு, ஏப். 29**

**மனிதஉரிமைகள் ஆணைக்குழு விடுத்த அறிவுறுத்தல்களையும் செவிசாய்க்காது மீளவும் இ.போ.ச. பேருந்துகள் மாணவர்களை ஏற்றாது வீதியில் அந்தரிக்கவிட்டுச் செல்கின்றன என துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

**அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;**

**பாடசாலை செல்வதற்கு பாடசாலையில் இருந்து மீண்டும் வீடு திரும்புவதற்கும் பல்வேறு சிரமங்களை மாணவர்கள் தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர்.**

**ஊடகங்களில் வெளிவந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயம் சொந்தப் பிரேரணையின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு இ.போ.ச. சாரதிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியது. ஆயினும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களை புறம்தள்ளிவிட்டு மீண்டும் மாணவர்களை இ.போ.ச. பேருந்துகள் ஏற்றாது செல்கின்றன. இதனால் மாணவர்கள் வீதியில் அந்தரிக்கும் நிலைமை தொடர்ந்து நீடிக்கின்றது.**

**எனவே, சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் இந்தத் தகாத நடவடிக்கை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மனிதஉரிமைகள் ஆணைக்குழு கவனம் செலுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.** (ச-19)




**மல்லாவியில ஒரு செத்தவீட்டுக்குப் போய், குளத்தில குளிக்கேக்க தம்பியும், அண்ணையும் தண்ணிக்குள்ள இழுபட்டு செத்த விசயம் உங்களுத் தெரிஞ்சிருக்கும். தம்பியை சுழிக்குள்ளால வேகமா வந்த தண்ணி இழுத்துக்கொண்டு போக, அண்ணன் அவரைக் காப்பாத்தப் போக கடைசியா ரண்டு உயிரும் அநியாயமாப் போட்டுதுகள். அப்பிடிச் செத்த அண்ணன் ஒரு கண்டுபிடிப்பாளர் எண்டு கனபேருக்குத் தெரியாது.**

**அவரின்ர பேர் சுமன். ஆள் மானிப்பாயில ஒரு ரயர்க்கடை வைச்சிருந்தவர். ரயர்க்கடை எண்டால் கொம்பனியளில ரயர் வாங்கி விக்கிறதோட மட்டும் சுமன் நிக்கேலை. அதையும் தாண்டி அந்த ரயர்களை எப்பிடிக் கனகாலம் பாவிக்கிறது எண்டுற கண்டுபிடிப்புகளை சுமன் செய்து, அதில வெற்றியும் கண்டவர். ரயர் வாழைப்பழம் போல தேய்ஞ்சு போனாலும் கூட, சுமனிட்ட போனால் அரை மணித்தியாலத்தில அதில 'பூ வெட்டி' புது ரயர் மாதிரி ஆக்கிடுவார். அப்பிடி சுமன் பூவெட்டிக் குடுத்தால் புது ரயர் எவ்வளவு காலம் பாவிச்சுதோ அதேயளவு காலம் திரும்பவும் பாவிக்கும். இன்னொருவிதமாச் சொன்னால் ரயர்களின்ர ஆயுளை இரட்டிப்பாக்கிற வேலை. இப்பிடி ரயரில பூவெட்டுற 'ரீ கொண்டிசன்' வேலை வெளிநாடுகளிலையும், கொழும்புப்பக்கமும் , இஞ்சையும் சிலர் செய்யினம் தான். ஆனால் சுமன் செய்யிறதுக்கும் அவை செய்யிறதுக்கும் உள்ள வேறுபாடு என்னெண்டால், சுமன் செய்தா அது 'ஒரிஜினல்' புதுரயர் மாதிரியே இருக்கும். மற்றவை செய்தால் அது பார்த்த உடனேயே 'ரீ கொண்டிசன்' எண்டு தெரிஞ்சிடும். இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ள சுமன்ர கண்டுபிடிப்பால கனபேருக்கு லாபம். அதோட தன்ர கடைக்கு வாற எல்லாருக்கும் மதிப்பளிச்சுப் பழகிறதால சுமனை எல்லாருக்குமே பிடிக்கும்.**

**சுமன்ர ரயர்க் கண்டுபிடிப்பில முக்கியமானது, கம்பிச் சில்லுக்கும் 'ரியூப்லஸ்' ரயர் போடுறது வெளிநாடுகளில கூட இதை ஒருத்தரும் கண்டுபிடிக்கேலை. பொதுவா கம்பியில்லாத 'ரிம்' உள்ள சில்லுக்குத்தான் ரியூப் இல்லாமல் ரயர் (ரியூப்லெஸ் ரயர்) போடலாம். கம்பியுள்ள ரிம்முக்கு ரியூப்லெஸ் ரயரைப் போட்டால் , கம்பியுள்ள ஓட்டையளுக்கால காத்துப்போடும். அந்தச் சிக்கலுக்கு தானே ஒரு முறையைக் கண்டு பிடிச்சு கனபேருக்கு அப்பிடி கம்பியுள்ள சில்லுக்கும் சுமன் ரியூப்லெஸ் ரயர் போட்டுக் குடுத்திருக்கிறார். ஆனால் 'நீரில் மூழ்கி மரணம்' எண்ட சம்பவத்தில இப்பிடி ஒரு உள்ளூர்க் கண்டுபிடிப்பாளனையும் நாங்கள் துலைச்சிட்டம் எண்டது கனபேருக்குத் தெரியாது.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பாளர் தினமன்று வடக்கில் விடுமுறை

## வடக்கு தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

உழைப்பாளர் தினமான எதிர்வரும் மே முதலாம் திகதி விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது என வடக்கு மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்தியறிக்கையில், தன்னலமற்ற, நிகரில்லா தியாக உழைப்பைக் கௌரவிக்கும் முகமாக மே முதலாம் நாள் தொழிலாளர் தினமாக கொண்டாடப்படுகின்றது. 1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி மகத்தான வேலைநிறுத்தப் போராட்டத்தின் அடையாளமே இன்று உழைப்பாளர் தினமாக கொண்டாடப்படுகிறது. அதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்குங்கள்.

அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் கச்சேரியிலிருந்து ஆரம்பமாகி பேருந்து நிலையம் வரை இடம்பெறும் மோட்டார் சைக்கிள் ஊர்வலத்தில் தொழிலாளர்கள் பங்கேற்குமாறு வடக்கு மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்க செயலாளர் நந்தகுமார் பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார். (ச)

# ஆண்டு விழாவை முன்னிட்டு சைக்கிள், மரதன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 29

இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமையும், ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமையும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று சனிக்கிழமையும், மரதன் ஓட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 6 மணிக்கும் இளவாலை சித்திரமேழிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும். சைக்கிள் ஓட்டப் போட்டி சுமார் 55 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டது. மரதன் 12 முதல் 15 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக நடைபெறவுள்ளது. பெண்களுக்கான மரதன், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும். குறித்த போட்டி 7 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கியது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-14,66)

# பற்றிக்ஸ் கல்லூரியில் ரென்னிஸ் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 29

அகில இலங்கை ரென்னிஸ் சங்கத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி நடத்தும் தேசிய ரீதியிலான ரென்னிஸ் சுற்றுப்போட்டி பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி ரென்னிஸ் திடல்களில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. அதன் தொடர்ச்சியான போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கிடையே 14 வயதுக்கும், 18 வயதுக்கும் கீழ்ப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் போட்டிகளில் பங்குபற்றலாம். (ஒ-14)

# ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் மே தின பேரணிகள்

யாழ்ப்பாணம், ஏப். 29

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் "ஆட்சியின் அடக்குமுறைகளை எதிர்க்கும் புரட்சிகர மேதினம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம், மலையகம், வவுனியா ஆகிய பிரதேசங்களில் எதிர்வரும் மே முதலாம் திகதி மே தினப் பேரணிகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை வீதி கல்வியங்காடு புதிய செம்மணிச்சந்தி வீதியிலிருந்து மாலை 4 மணிக்கு பேரணி ஆரம்பமாகி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டம் இடம்பெறும். மலையகத்தில் இராகலை நடுக்கணக்கு கடை வீதியில் இருந்து மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகி கூட்டம் இடம்பெறும் மைதானத்தை மு.ப. 11 மணிக்கு வந்தடையும். வவுனியாவில் காலை 9 மணிக்கு வவுனியா மத்திய மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் இருந்து ஆரம்பித்து நகரசபை மண்டபத்தை வந்தடையும். பொதுக்கூட்டம் நகரசபை மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (ஒ-14)



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்



### தனுசு

முன்வைத்த காலை பின்வைக்காத கொள்கைவாதிகள் நீங்கள். உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் சோபகிருது புத்தாண்டு பிறக்கிறது. சோர்வு நீங்கும்; தன்னம்பிக்கை பிறக்கும். புதிய திட்டங்கள் நிறைவேறும். உண்மையில்லாத உறவுகளை ஒதுக்கித் தள்ளுவீர்கள்.

சித்திரை மாதம் செலவுகள் உண்டு. எனினும் இழுபறியாக இருந்த அரசு வேலைகள் முடியும். ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும்.

ஆண்டுத் தொடக்கம் முதல் 21.4.2023 வரை குரு பகவான் ராசிக்கு 4ம் வீட்டில் தொடர்வதால், வேலைச்சுமை அதிகரிக்கும். தாயாருக்கு உடல் உபாதைகள் இருக்கும். தாய்வழிச் சொத்துப் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கப் பாருங்கள். 22.4.2023 முதல் வருடம் முடியும் வரை 5ம் வீட்டுக்கு குரு செல்வதால், எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். மகளுக்கு திருமணம் இனிதே கூடிவரும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் 25.8.2023 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை சனிபகவான் 3இல் நுழைவதால் புதுச் சொத்து வாங்குவீர்கள்.

சனிபகவான் 26.08.2023 முதல் 19.12.2023 வரை பாதச்சனியாக 2ல் அமர்ந்திருப்பதால் பேச்சில் நிதானம் அவசியம்.

13.05.2023 முதல் 02.07.2023 வரை செவ்வாய் 8ல் அமர்வதால் கணவன் - மனைவிக்குள் மனக் கசப்புகள் வரும். இருவரும் மனம் விட்டுப் பேசி, சரிசெய்வது சிறப்பு. சகோதர வகையில் ச்சரவு வரலாம். சொத்துப்பிரச்சினை தலைதூக்கும். 14.4.2023 முதல் 3.5.2023 வரை சுக்ரன் 6இல் மறைவதால் பேச்சால் பிரச்சினைகளும் வரக் கூடும்.

**வியாபாரிகளே!** மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஒப்பந்தங்கள் தேடி வரும். வருட மத்திய பகுதியில் கடையைச் சொந்த இடத்துக்கு மாற்றுவீர்கள்.

**உத்தியோகஸ்தர்களே!** வெகுநாள்களாக எதிர்பார்த்த பதவியுயர்வு கிடைக்க வாய்ப்புண்டு. புதிய வாய்ப்புக் கிடைக்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, உங்களை முதல் இடத்துக்கு உந்தித் தள்ளுவதுடன், வசதி வாய்ப்புகளைத் தருவதாகவும் அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)





**மேடம்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொடங்கும் செயல்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.



**இடபம்:** அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக முடியும். உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும்.



**மிதுனம்:** காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.



**கடகம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.



**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.



**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும். வழிபாடு மகிழ்ச்சி தரும்.



**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.



**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற் கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.



**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.



**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சட்டங்களும் குற்றங்களும்!

ஒரு கிலோ கஞ்சாவைக் கடத்திய குற்றத்துக்காக சிங்கப்பூர் வாழ் தமிழர் ஒருவருக்கு அந்த நாட்டில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. போதைப்பொருளுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை இரக்கமற்று நடைமுறைப்படுத்தும் நாடாக சிங்கப்பூர் இருக்கின்றது. மனிதஉரிமை அமைப்புக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், தன்னார்வ அமைப்புக்கள் என்று பலவும் சிங்கப்பூரின் இந்த 'கொலைக் கலாசாரத்துக்கு' கடுமையான கண்டனங்களைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்து வந்தாலும் அந்த நாடு 'போதைக்கு மரணமே தீர்வு' என்பதில் ஆணித்தரமாக நிற்கின்றது, துணிந்து நடைமுறைப்படுத்துகின்றது. இதனால்தான் சிங்கப்பூரில் ஹெரோய்ன், கஞ்சா, மாவா, ஐஸ் இப்படியான உயிர்கொல்லிப் போதைக்கலாசாரம் என்பது அறவே இல்லை. இதன் தொடர்ச்சியாகத்தான் வெறும் ஒரேயொரு கிலோ கஞ்சாவைக் கடத்திய குற்றத்துக்காக தங்கராஜு சுப்பையா என்ற மேற்படி நபருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

முன்னொரு காலத்தில் (மலேசியாவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த காலத்தில்) சிங்கப்பூர் பூமியில் நரகத்தின் வடிவமாகவே இருந்தது. எங்கு பார்த்தாலும் கொலைகள், கொள்ளைகள், போதைக் கலாசாரங்கள் என்று அந்தத் தேசம் சீரழிந்தது. சிங்கப்பூரை வைத்துப் பராமரிப்பதிலும் பார்க்க – அதற்கு வலிந்து சுதந்திரம் கொடுத்துவிட்டால் தாம் தப்பிவிடலாம் என்று மலேசியா தானாக முன்வந்து சிங்கப்பூரை சுதந்திர நாடாக்கியது என்கிறது வரலாறு. இவ்வாறிருந்த சிங்கப்பூர் இன்று அதற்கு நேரெதிர் திசையில் பயணித்து, உலகின் சிறந்த 'பொருளாதார வல்லரசுகளில்' ஒன்றாக மாறியிருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் போதையைத் தம் தீவிலிருந்து ஒழித்துவிடவேண்டும் என்பதில் சிங்கப்பூர் மக்கள் கொண்டிருந்த திடமும், நம்பிக்கையுமே. போதையே அனைத்துச் சீரழிவுகளுக்கும் ஊற்று, அதை ஒழித்துவிட்டால் மிகுதிப் பிரச்சினைகள் தானாகச் சரிவந்துவிடும் என்ற கொள்கையளவிலான முடிவுகளும் ஆத்மார்த்தமாக அதற்குக் கொடுத்த செயற்பாட்டு வடிவங்களும்தான் சிங்கப்பூரின் உயர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணம்.

இதே சிங்கப்பூர் முன்னொரு நாளில் இலங்கை போன்று தான் வரவேண்டும், வளரவேண்டும் என்று ஆசைப்பட்டது. அப்படியெனில் இன்று இலங்கை எங்கு உயர்ந்திருக்கவேண்டும்? ஆனால், இலங்கை தற்போது எத்தகைய நிலையிலுள்ளது? இந்தக் கேள்விகளுக்கான பதில்களைத் தேடவேண்டிய கட்டாயம் எங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. கஞ்சா, ஹெரோய்ன், மாவா, ஐஸ் என்று விதம்விதமான போதைப்பொருள்கள் ஊற்றெடுக்கும் பூமியாக இலங்கை மாறியிருக்கின்றது. பாடசாலை மாணவன் முதல் இந்தப் போதைப் பொருள்கள் அனைவரையும் ஆட்கொண்டு விரவியிருக்கின்றது. 60 கிலோ, 80 கிலோ, 100 கிலோ என்று மூடைமூடையாக கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்படுகின்றன. ஆனால், சந்தேகநபர்கள் கைதுசெய்யப்படாத அவலமும் தொடர்கின்றது. இதுவே சிங்கப்பூராக இருந்திருந்தால்…?


நிற்க:

இந்தப் பத்தியின் நோக்கம் 'சிங்கப்பூரின் கொலைக் கலாசாரத்தை' நியாயப்படுத்துவதோ அல்லது ஏற்றுக் கொள்ளுவதோ அல்ல. உயிர் உன்னதமானது. அதைக் கொல்லும் தீர்ப்பிடும், எடுத்துக்கொள்ளும் அதிகாரம் எவருக்கும் இல்லை. ஆனால், போதைப்பொருளுக்கு எதிரான சட்டங்களை இறுக்க வேண்டிய காலத்தேவை இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கின்றது. மரண தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும், நீதிமன்றத்தில் இலகுவான பிணையெடுப்புக்கள் இந்தத் தேசத்தில் இல்லாதொழிக்கப்படவேண்டும். சட்டங்கள் இறுகும்போதுதான் குற்றங்கள் குறையும் என்பார்கள். இதற்கு சிங்கப்பூர் மிகச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு.

நாளொரு நல்வார்த்தை

"எவன் தன்னிடமுள்ள குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்"

– மகாத்மா காந்தி




# மனிதஉரிமை மீறல்கள்: பட்டியல் தொடர் மீளாய்வு

## அமெரிக்கா தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 29**

**இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்த மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மேலும் சில இலங்கை அதிகாரிகள் தொடர்பில் அமெரிக்கா மீளாய்வு செய்து வருகின்றது என இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.**

ஆங்கில ஊடகமொன்று எழுப்பிய இந்த கேள்விக்குப் பதிலளிக்கையில் அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலுள்ள தூதரகம் மற்றும் வெளிவிவகாரத் திணைக்களம் ஆகியவை தொடர்ச்சியாக இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து மீளாய்வு செய்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியையும், மனிதஉரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கான பொறுப்புக்கூறலையும் மேம்படுத்துவதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் பாதிப்பு ஏற்படாது - என்றார். (ச-இ)

# பயங்கரவாதச் சட்டவரைவில் நல்லிணக்கத் தீர்வு அவசியம்

## மனிதஉரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

நீண்டகாலமாக நீடித்துவரும் சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவான திட்டத்துடன் கூடிய பரிந்துரைகள் வெளியிடப்படும் வரை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நாடாளுமன்றில் முன்வைக்கவேண்டாம். இவ்வாறு இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை அதன் தற்போதைய வடிவில் நாடாளுமன்றில் முன்வைக்கவேண்டாம். தெளிவான திட்டத்துடன் அதன் பரிந்துரைகள் வெளியிடப்படும் வரை காத்திருக்கவும்.

இந்தச் சட்டவரைவு தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் மேலும் ஆராய வேண்டியது அவசியமானது.

30 வருடங்களுக்கும் மேலாக நீடித்த, பயங்கரமான உள்நாட்டுப் போரின் அழிவுகளின் கீழ் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு சமூகங்களுக்கு மாத்திரமல்லாது 70 மற்றும் 80 களில் தெற்கில் ஏற்பட்ட கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயல்முறை அவசியம் - என்றுள்ளது. (ச-இ)

நாளை
**30.04.2023**
**ஞாயிற்றுக்கிழமை**
**சித்திரை 17**

சுபநேரம் : 08.58 - 10.28
ராகுகாலம் : 04.28 - 05.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமையில் கசிப்பு இருவர் கைதாகினர்!

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஊரெழுப் பகுதியில் இருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்கு, சுன்னாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வந்தது தெரியவந்தது. அதனையடுத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 வயதான சிறுவனையும், கசிப்பைக் கொள்வனவு செய்ய வந்த 35 வயதான ஒருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-125)

# ஊரெழுவில் விபத்து: மூதாட்டி படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 29

ஊரெழு பர்வதவர்த்தனி மனோன்மணி அம்மன் ஆலயத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஊரெழுவில் அமைந்துள்ள தனது பிறந்த வீட்டுக்குச் சென்றுவிட்டு துவிச்சக்கரவண்டியில் உரும்பிராயில் அமைந்துள்ள தன் வசிப்பிட வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே அவர் பட்டா ரக வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார். உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி உமாதேவி கனகநாயகம் (வயது -73) என்ற மூதாட்டியே படுகாயமடைந்தவராவார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-66)



# கிரிக்கெட் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 29

அரியாலை காந்தி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் காந்தி பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடர், இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும், இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள போட்டியில் 8 அணிகள் பங்குபற்றவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)


## வேலையாள் தேவை

யாழ்நகரில் இயங்கும் கடையொன்றிற்கு பெண் ஊழியர் தேவை.

074 288 5023

(cs 50221) (N-1)

## பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிக்க பணிப்பெண் தேவை.

077 069 8105

(cs 50203) (N-1)

## பணிப்பெண் தேவை

தெல்லிப்பழையிலுள்ள வீடொன்றில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

074 288 5023

(cs 50221) A(N-1)

## மணமகள் தேவை

1986, (V), அத்த நட்சத்திரம், இரண்டாம் பாதம், 2 இல் செவ்வாய், மொத்த கிரகபாவம் 45 1/2 உள்ள, அரச தொழில் (சாரதி) புரியும் மணமகனுக்கு அரச தொழில், அன்றேல் தனியார் துறையில் தொழில்புரியும் மணமகள் தேவை.

077 039 9063

(CS/50225)A(I-1)

## நல்லூர் கந்தன் திருமண சேவை

எல்லா இனம், மதம், உள்நாடு, வெளிநாடு அரச உத்தியோகம், தனியார் இஞ்சினியர், வைத்தியர் ஆகிய எல்லா விதமான மணமக்களும் விரைவாக திருமணம் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: V. ஜெயந்தி

077 973 3183


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பூஜை அனுட்டானங்களை நிகழ்த்தி வந்த பிரதமகுரு

### யோ.குருசாமிக் குருக்கள்



அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி மத்தி அத்திப்புலம் மாவடிக்கந்தனை வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி....

மலர்வு 23.05.1948 — உதிர்வு 23.04.2023

**பாடசாலைச் சமூகம்**
**யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.**
**கைதடி மத்தி.**

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றும் **தேவசேனாதிபதி சுசாந்தன்** மற்றும் எமது திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் நீலக்கால் நண்டு மேம்பாட்டு நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் **தே.சுதர்ஷன்** ஆகியோரின் அன்புத் தாயார்

### தேவசேனாதிபதி புவனேஸ்வரி

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**உதவிப்பணிப்பாளரும்**
**பணியாளர்களும்**

**கடற்தொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம், மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(CS 24655)A-1

## Invitation for Bids (IFB)
## Jaffna Municipal Council
## Purchasing of Street Lights
## JMC/PO5/MSO/Street Light/2023

1. The Chairman Procurement Committee (PC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Chief Engineer, Jaffna Municipal Council. TP:0212221186 Fax: 0212221187 E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. to 15:00 hrs.
4. Qualifications requirements include: Possessing the minimum 3 years' experience in selling and having island wide maintenance in the particular brand and field. A margin of preference for eligible locally produced goods offered shall not apply. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **29th April 2023 until 19th May 2023 from 09:00 hrs.** to 14:00 hrs. on the submission of a written application and upon a payment of non-refundable fee of Rs.2000.00 + All Taxes the payment method will be cash or bank draft drawn in favor of **Commissioner, Jaffna Municipal Council.**
6. Bids must be delivered to the address given below on or before 19th May 2023 at 15.00 hrs. Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
7. A pre bid meeting will be held at Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **11th May 2023** at 14:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
8. The address referred to above is **Commissioner, Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna.** The Bid Name &No must be mentioned on the top of the envelop. The bid can be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.
9. The bid validity shall be until:21.07.2023 **(63 days after the deadline for bid submission)**

| S. No. | Bid Name & No. | Name of the Item | Period of Contract | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Amount | Required Period |
| 01 | Purchasing of Street Lights JMC/PO5/ MSO/Street Light/ 2023 | 50 Watts single high power COB LED Street Light – 189 Nos. | 45 Days | 72,000.00 | 18.08.2023 |
| | | 100 Watts double high-power COB LED Street Light – 81 Nos. | | | |

**Chairman,**
**Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point Pedro Road, Nallur.**

(cr.39750 (N - 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும்

மலர்வு 16 • 05 • 1935



உதிர்வு 01 • 04 • 2023

## அமரர் திருமதி மீனாம்பாள் திசைவீரசிங்கம்

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29. 04. 2023) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (01-05-2023) திங்கட்கிழமை அன்னாரின் **(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)** இல்லத்திலும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாபேருக்கும் அறியத்தருகின்றோம். மேலும், அன்னார் காலமான செய்தி அறிந்து சகலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய யாவருக்கும் அளப்பரிய நன்றிகள். அந்தியேட்டி கிரியைகளுக்காக கீரிமலை வருகின்றவர்கள் சிரமம் பாராது தொலைபேசி மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளும்படி தயவாக அன்னாரது குடும்பத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

தி. உதயகுமாரன் + தி. சந்திரகுமார்..
(மகள், மகன்மார், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள் மற்றும் குடும்ப உறவினர்கள்.)
மகன் - தி. உதயன் - 41788663442, 077 6520 823,
மகன் - தி. சந்திரன் - 416-561 3609, திருக்குமரன் - 077 951 8633

(CS/246339)AH-1

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 13 • 03 • 1941



மறைவு 02 • 04 • 2023

கடந்த (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் புஸ்பரோசாமணி இராஜரட்ணம்


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (02.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

40/33, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம். (CS/245580)AH-1

குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 23 • 08 • 1932



மறைவு 28 • 03 • 2023

கடந்த (28.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா தில்லைநாதன்

(சுன்னாகம் கிழக்கு, சிவபூதவராஜர் ஆலய பரிபாலகர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.04.2023) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(CS/50229)AH-1

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 • 03 • 1926



மறைவு 26 • 04 • 2023

## கந்தையா செட்டியார் பஞ்சாட்சரம்

(Land Development Department - Technical Officer)

(வவுனிக்குளம், முழங்காவில், மாங்குளம், கொழும்பு)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், 958/10, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பஞ்சாட்சரம் கடந்த (26.04.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், ஸ்ரீக்குமார், வசந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமாரி, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சோபனா தனஜேந்திரன், பாரதி, சதுர்ஷன், ஜனார்த்தன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கதிரவேலு, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், யோகராஜா, தனலட்சுமி, காலஞ்சென்ற தங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


958/10, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (CS/50231)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

021 221 1313, 077 079 5226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த (10.05.2022) செவ்வாய்க்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### திரு.வைத்தியநாதன் சிறிபத்மநாதன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (29.04.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் **"எமது இல்லம் சிறிரங்கத்தில்"** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிறிரங்கம்**
**261/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS 24651) A-1

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
02.05.1972

உதிர்வு
09.05.2022

அமரர்
### சத்தியேந்திரா மங்கையர்க்கரசி

எங்கள் குலவிளக்கு எம்மைவிட்டு பிரிந்து சென்று
ஓர் ஆண்டு ஆகியும் அவரது நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

**குடும்பத்தினர்.**
**5ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு**
**077 989 3077**

(CS 24649) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 01 . 1993

மறைவு 28 . 04 . 2023



### உலகநாதன் பவித்திரன்

காரைநகர் கருங்காளி மற்றும் சத்திரந்தையை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, கருவேலடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட உலகநாதன் பவித்திரன் அவர்கள் நேற்று (28.04.2023) வெள்ளிக்கிழமை முருகன் அடி சேர்ந்தார்.

அன்னார் உலகநாதன் (சந்திரன்) கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், சிந்துஜா, கஜந்துகன், கஜந்துகா ஆகியோரின் அன்பு சகோதரனும், அகிலன், சதீசன், துவாரகா ஆகியோரின் மைத்துனரும், நவமணிதேவி, சத்தியதேவி, சித்திரா, அம்பிகாவதி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சற்குணராஜா ஆகியோரின் மருமகனும், சுகந்தன், சுகன்யா, கௌசிகன், கபிசன், டினேஷன், நீரா, கௌதன், மதுசன், மதுசா, மைக்கல் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், சாய், சரீஸ், நடாசா ஆகியோரின் மாமனாரும், அமரர் நடராசா, குகனேசன், சிவபாலன், கோணேசலிங்கம் ஆகியோரின் பெறாமகனும், பொன்னம்மா காலஞ்சென்ற புஸ்பம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.27, கருவேலடி லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**உலகநாதன் (சந்திரன்)**
**077 937 1134**

(CS 24652) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 03 . 03 . 1953

விண்ணில் 27 . 04 . 2023



### திரு.தம்பிமுத்து திருஞானசம்பந்தர்

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும், ஸ்ரேஷன் வீதி, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திரு. தம்பிமுத்து திருஞானசம்பந்தர் கடந்த (27.04.2023) வியாழக்கிழமை ஈசன் சேவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், சேனாதிராஜா செல்லக்கண்டு தம்பதிகளின் அன்பு மருமகனும் திருஞானசம்பந்தர் தவமலரின் அன்புக் கணவரும் நிரோஜினி (சட்டத்தரணி), திருவரன் (Accountant People Leasing PLC), அகிலினி (Application Developer), யோகரூபன் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூமணி தனபாலசிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து துரைராஜா, தம்பையா கனகம்மா, பொன்மணி ஆறுமுகம் சிவசுப்ரமணியம் விமலாதேவி, தம்பிமுத்து பாக்கிய லீலாவதி, தம்பிமுத்து தர்மகுல ராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சரவணமுத்து கதிர்காமத்தம்பி, சேனாதிராஜா செல்வநாயகம் செல்வநாயகம் சகுந்தலாதேவி, செல்லத்துரை செல்வரட்ணம், செல்வரட்ணம் சுகந்தமலர், சேனாதிராஜா முருகானந்தன், முருகானந்தன் மோகனமலர், சேனாதிராஜா வேல்முருகன், வேல்முருகன் இராஜகன்னிகா, ஐயாத்துரை சிவநேசன், சிவநேசன் தங்கமலர், சேனாதிராஜா ராஜ்குமார், ராஜ்குமார் பியூலா மற்றும் காலஞ்சென்ற இந்திராணி கதிர்காமத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 30.04.2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**077[illegible]74617 தி. திருவரன் (மகன்)**
**077 1660890 தி. யோகரூபன்(மகன்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 24653) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல் வீரவன்ஸவின் புனைகதை அமெரிக்கத் தூதுவர் குற்றச்சாட்டு!

கொழும்பு, ஏப். 29

**இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ள கருத்துக்களை மறுத்துள்ளார்.**

'ஒன்பது மறைக்கப்பட்ட கதை' என்ற நூல் வெளியீட்டு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ 'அரகலய' ஆர்ப்பாட்டத்தின் பின்னணியுடன் அமெரிக்கத் தூதுவரை தொடர்புபடுத்தி அவரை விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ருவிற்றறில் பதிவிட்டுள்ள தூதுவர் தனது மறுப்பைத் தெரிவித்துள்ளார்.

'புனைகதை' என்று முத்திரை குத்தப்படவேண்டிய புத்தகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அப்பட்டமான பொய்களை பரப்பியிருக்கின்றார். 75 ஆண்டுகளாக அமெரிக்காவும் இலங்கையும் ஜனநாயகம், இறையாண்மை மற்றும் செழிப்புக்கான உறுதிப்பாட்டை பகிர்ந்து கொண்டிருக்கின்றன. அதேபோன்று தொடர்ந்தும் கூட்டாண்மையுடன் எதிர்காலத்தை நாம் உருவாக்குவோம்' எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)




# மலேரியா ஒழிப்பு; மன்னாரில் பேரணி

மன்னார், ஏப். 29

சர்வதேச மலேரியா ஒழிப்பு தினத்தை முன்னிட்டு "மலேரியா அற்ற இலங்கை" எனும் தொனிப்பொருளில் மலேரியா ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி மன்னாரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தர்மராஜா வினோதனின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவினரால் விழிப்புணர்வுப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

பேரணியானது மன்னார் பொது மருத்துவமனையில் ஆரம்பித்து மன்னார் நகர பிரதான சுற்றுவட்டத்தினூடாக மீண்டும் மன்னார் பொது மருத்துவமனையை சென்றடைந்தது.

"மலேரியா தொற்று காணப்படும் நாடுகளுக்கு செல்வதற்குமுன் உரிய தடுப்பு மருந்தை எடுத்துக்கொள்ளல்", "குறித்த நாடுகளில் இருந்து திரும்பியவுடன் மலேரியாவுக்கான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளல்" உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

விழிப்புணர்வுப் பேரணியில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு இயக்க உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர், புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் அல் அசார் தேசிய பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14-213)

# அறிவித்தல் விடுத்தும் வராவிடின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## காணாமலாக்கப்பட்டோர் உறவுகளுக்கு ஓ.எம்.பி. அலுவலகத்தால் மிரட்டல்!

முல்லைத்தீவு, ஏப். 29

காணாமலாக்கப்பட்டோர் விவரங்களை வழங்குமாறு அறிவித்தல் விடுத்தும் அலுவலகத்துக்கு வரவில்லையெனில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று ஓ.எம்.பி. அலுவலகத்தால் காணாமலாக்கப்பட்டோரது உறவினர்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்கள் தெரிவித்ததாவது,

ஓ.எம்.பி. அலுவலகம் உருவாக்கப்பட்டதில் இருந்து இன்று வரைக்கும் எட்டு மாவட்ட சங்கத் தலைமையினாலும் உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஓ.எம்.பி. அலுவலகத்தினர் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் கடிதங்களை அனுப்பி வருகின்றனர்.

கடிதத்தில் வங்கிக்கணக்கு இலக்கத்தை கொண்டு வருமாறும் ஓ.எம்.பி. அலுவலத்தின் நட்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. நான்காவது தடவை அறிவித்து வரவில்லை என்றால் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்றும் மிரட்டல் விடுத்துள்ளனர்.

எங்களைப் பயமுறுத்தி விவரங்களை எடுக்கவேண்டும் என்றால் அவ்வாறன அரசாங்கமும் தேவையில்லை, ஓ.எம்.பியும் தேவையில்லை, வெளிநாட்டவர்களின் அழுத்தமும் தேவையில்லை.

காணாமற்போன உறவுகளுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் நீதி வழங்க வேண்டும் என்று இன்று வரை போராடி வருகின்றோம். இந்த நீதியைத் தவிர எவர் வந்தாலும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம் - என்றனர். (ஒ-14-19)

# திறமைக்கேற்ற துறையை தேர்ந்தெடுத்தல்வேண்டும்

## மன்னார் மாவட்டச் செயலர் இளையோருக்கு அறிவுரை

மன்னார், ஏப். 29



இன்றைய நவீனமயமாதல், பொருளாதார மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்நோக்கி உள்நுழைந்தாலேயே உங்களை நீங்களே நிலைநிறுத்திக்கொள்ளமுடியும்.

அதற்கு தமது திறன்களுக்கேற்ற சிறந்த துறைகளை இளையோர் தேர்ந்தெடுக்கவேண்டும். இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் இடம்பெற்ற தொழிற் சந்தையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இளையோரின் எதிர்காலத்தை வளப்படுத்தும் முகமாக - தங்களது திறன்களை அடையாளம் கண்டு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த தொழிற்சந்தை நடத்தப்படுகிறது.

இன்றைய நவீனமயமாதல், பொருளாதார மாற்றம், அந்நியச் செலாவணி மாற்றம், விலை உயர்வுகள், தனிநபரின் வருமானத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சவால்களை இளையோர் எதிர்கொள்கின்றனர்.

இந்தச் சவால்களை இளையோர் தகர்த்து உள்நுழைந்தாலேயே உங்களை நீங்களே நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். பிறருக்கு இல்லாத திறமை உங்களுக்குள் மறைந்திருக்கும் அல்லது அதற்கான சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்காமல் இருந்திருக்கும். உங்கள் அறிவாற்றலை வெளிக்கொணர இத்தகைய தொழிற்சந்தைகள் வாய்ப்பளிக்கும். இன்றைய இளையோர் குறுகிய காலத்துக்குள் பணக்காரனாக வந்திடவேண்டும் என்று எண்ணுகின்றனர். எங்களுக்கு எதில் திறமை இருக்கின்றதோ அதில்தான் கால்பதிக்க வேண்டும் - என்றார். (ச-60)

# விமல் வீரவன்ஸவின் குற்றச்சாட்டு பாதுகாப்பு அமைச்சு நிராகரிப்பு!

கொழும்பு, ஏப். 29

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது ஜனாதிபதி மாளிகைக்குள் படைத்தளபதிகள் மற்றும் ஜனாதிபதி உள்ளிட்டோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவிருந்ததாகவும், அந்தச் சந்தர்ப்பத்தில் முன்னாள் இராணுவத் தளபதி இந்தியாவுக்குச் சென்றிருந்தமை சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ள கருத்தை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்ட அறிக்கையில், கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் பக்க நிகழ்வாக தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம் கடந்த ஆண்டு ஜூலை 7ஆம் திகதி இந்தியாவில் இடம்பெற்றது.

நாட்டின் அப்போதைய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை மற்றும் அனுமதியின் கீழ் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாதுகாப்பு பதவி நிலை தலைமை அதிகாரி, முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா குறித்த மாநாட்டில் பங்குபற்றியிருந்தார் என்று பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது. (ஒ-இ)

# இளையோர் மேம்பாட்டுக்கு மன்னாரில் தொழிற்சந்தை

மன்னார், ஏப். 29

மன்னார் மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தை மேம்படுத்தும் முகமாக மாபெரும் தொழிற்சந்தை கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் நடைபெற்ற இந்தத் தொழிற்சந்தையை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆரம்பித்து வைத்தார்.

40க்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் உயர்கல்வி வழங்கும் நிறுவனங்கள், பயிற்சி வழங்கும் நிறுவனங்கள், வியாபார ஊக்குவிப்பு செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிறுவனங்கள் பங்கேற்று இளையோருக்கு வழிகாட்டல்களை வழங்கின.



அவர்களின் திறன்கள் அடையாளம் காணப்பட்டு அதற்கான வழிகாட்டலூடாக உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டது. (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து மோதி ஒருவர் படுகாயம்

வவுனியா, குழுமாட்டுச்சந்தியில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்களை ஏற்றிச்சென்ற பேருந்து மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குழுமாட்டுச்சந்தியில் வீதியைக் கடக்க முற்பட்ட நபரையே பேருந்து மோதித்தள்ளியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-18)

## வெடுக்குநாறி...

ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்கள் கடந்த மாதம் இனம் தெரியாத நபர்களால் உடைத்து அழிக்கப்பட்டதுடன் சிலைகளும் களவாடப்பட்டிருந்தன.

இதனையடுத்து ஆலயத்தில் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யும் ஏற்பாடுகள் பல தரப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நீதிமன்ற வழக்கைக் காரணம்காட்டி தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் அதற்குத் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த இருதினங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்ததுடன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு நீதின்றம் அனுமதி வழங்கியது. உடைக்கப்பட்ட விக்கிரகங்களை அதே இடத்தில் மீண்டும் வைப்பதற்கும் நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது. இதனையடுத்து நேற்றுக்காலை சுபநேரத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் அனைத்தும் மீண்டும் வைக்கப்பட்டன. பல சிரமங்களுக்கு மத்தியில் புதிய விக்கிரகங்கள் மலையின் உச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. குறித்த நிகழ்வில் ஆலயத்தின் நிர்வாகத்தினர், பூசகர், சமூக ஆர்வலர்கள், ஆன்மீகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-110)

## பயங்கரவாத...

முன்வைக்கப்படும் - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு ஏப்ரல் இரண்டாவது வார நாடாளுமன்ற அமர்வின்போது முன்வைக்கப்படும் என்று அரசாங்கம் முன்னதாக அறிவித்திருந்தது. எனினும், அந்தச் சட்டவரைவுக்கு எதிர்ப்புகள் வலுத்தன. இந்த நிலையிலேயே இது விடயத்தில் அரசாங்கம் பின்வாங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:-


'மக்களை ஒடுக்குவதற்காகவே புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்படுகின்றது என சமூகத்தில் கருத்துகள் விதைக்கப்பட்டுள்ளன. அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும்போது அதற்கு எதிராக மக்கள் போராடினால் அவர்களை ஒடுக்குவதும் சட்டத்தின் நோக்கம் எனவும் கூறப்படுகின்றது. இது உண்மை அல்ல.

மக்களுக்கு எதிரான சட்டவரைவை முன்வைப்பதற்கு நாம் தயாரில்லை. புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், சட்டவரைவாகவே தற்போது உள்ளது. இந்நிலையில் இது தொடர்பில் கலந்துரையாடல் அவகாசம் தேவையென பல தரப்பினரும் கோரியுள்ளனர். எனவே, கலந்துரையாடல்களை நடத்துவதற்காக களத்தை அரசாங்கம் அமைத்துக் கொடுத்துள்ளது. பரந்துபட்ட கலந்துரையாடல்களின் பின்னர் திருத்தங்கள் சகிதமே சட்டவரைவு முன்வைக்கப்படும்' - என்றார். (அ-ம-44)

# மரண அறிவித்தல்

மண்ணில் 24 . 04 . 1947

விண்ணில் 28 . 04 . 2023



## இரத்தினம் தவராசா

கொம்மந்தறை வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தவராசா அவர்கள் நேற்று (28.04.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அன்னம்மா தம்பதியரின் இளைய மகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், மகாலிங்கம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலீபன், கேசவன், தீபா, கேமா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிதாஸன், செந்தில்குமரன், றோயனா, ராஜகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜலோன், வரோதயன், கஜானா, சபினாஷ், சஷ்திகா, கௌசிகன், கௌதமன், கௌசல்யன், கௌரீசன், கரீஸ்மன், தக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொம்மந்தறை வல்வெட்டித்துறையில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.


தகவல்:
குடும்பத்தினர்.
077 607 0680
076 5467 631

(CR 39751) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1945

மறைவு 28 . 04 . 2023



## குகமூர்த்தி மாப்பாண முதலியார் சிவகுமார்

(ஓய்வுபெற்ற முகாமையாளர், லக்சலா)

நல்லூரை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட குகமூர்த்தி மாப்பாண முதலியார் சிவகுமார் அவர்கள் 28.04. 2023 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குகமூர்த்தி மாப்பாண முதலியார், மகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற ரகுநாத மாப்பாண முதலி யாரின் மூத்த பேரனும், காலஞ்சென்ற ஈஸ்வரி (மாலா) அன்புக் கணவருழ், அஜந்தனின் பாசமிகு தந்தையும், லாவண்யாவின் அன்பு மாமனும், டிலான், பிரசன்னா ஆகியோரின் அன்பு பேரனும், கிருஷ்ண பாமா, ஆனந்தகுமார், சாந்திமதி, ரவிந்திரகுமார் ஆகியோரின் அன்பு சகோதரரும், பேரன்பல மூர்த்தி, பாமதி, சுமித்திரா, சரவணபவன்-லக்மினி, சிவனேஸ்வரி, ஜெகதிஸ்வரி- அருள்மயம் ஈஸ்வரன்- மனோ ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2023) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஒழுங்கை, வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9029 599

(CR 39752) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1940

மறைவு 26 . 04 . 2023



## கந்தையா நவரத்தினம் (வர்த்தகர்)

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம் கடந்த (26.04.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற புஸ்பம் அவர்களின் அன்புக் கணவரும், தாட்சாயினியின் (கனடா) அன்புத் தந்தையும், பொபி கஜேந்திராவின் அன்பு மாமனாரும், நோலனின் அன்புப் பேரனும், திருநாவுக்கரசு தனேஸ்வரி, இராமநாதன் பூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.36/14, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

தகவல்:
077 844 8740

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமலாக்கப்பட்டோர்...

புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடு செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

வேலணைபிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற வறிய மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணிலின் நெறிப்படுத்தலின்கீழ் வறிய குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வீதம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒரு வரப் பிரசாதமான விடயமாக இருக்கின்றது.

போர் அழிவுகளுக்குப் பின்னர் கொவிட் பெருந்தொற்றும் அதற்குப் பின்னர் இடம்பெற்ற போராட்டங்களும் நாட்டைப் பின்னடைவுக்குள் தள்ளியுள்ளன. வடக்கு - கிழக்கு என்றல்லாது நாட்டிலுள்ள அனைத்து மக்களும் இந்த மோசமான நிலையால் பாதிக்கப்பட்டனர். டொலர் நெருக்கடி, வருவாய் இன்மை, அந்நியச் செலாவணியின்மை, சுற்றுலாவிகள் நாட்டுக்குள் வராமை உள்ளிட்ட பலமுனைப் பிரச்சினைகளை நாங்கள் எதிர்கொண்டோம். இவ்வாறானதொரு நிலையில்தான் ஜனாதிபதி ரணில் நாட்டைப் பொறுப்பேற்று தற்போது கொஞ்சம் கொஞ்சமாக நாட்டை முன்னேற்றி வருகின்றார். நாங்கள் தற்போது முன்னோக்கி வருகின்றோம். இனி ஓர் அடியேனும் பின்னோக்கிச் செல்லமாட்டோம்.

**வடக்கில் அபிவிருத்திகள்**

தேசிய அபிவிருத்தியிலான இந்தத் திட்டத்தில் ஒட்டுமொத்த இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் விவசாயம் நவீனத்துவம் பெற்று வருகின்றது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையை இந்திய அரசாங்கத்தின் உதவியின்கீழ் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் விரைவில் தீர்வொன்றும் பெற்றுக்கொடுக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடுகளைச் செய்து பொருளாதாரத்தை முன்னேற்ற ஒத்துழைக்குமாறு தற்போதைய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. அந்த அழைப்பை அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம் - என்றார். (அ-ம-26)

## முதியவரை...

அதேபிடத்தைச் சேர்ந்த 'டிஸ்கோ ஐயா' என்று அழைக்கப்படும் அப்பாத்துரை வேலாயுதம் (வயது - 69) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் இறுதிச் சடங்குகள், அந்தியேட்டிக் கிரியைகள் செய்து வருபவர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலாயுதம் அவரது மனைவி மற்றும் மனைவியின் உறவினரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருமாக மூவரும் நேற்று அதிகாலை வீட்டில் உறங்கிக்கொண்டிருந்துள்ளனர். அப்போது கொட்டன் மற்றும் வாளுடன் இரண்டு கொள்ளையர்கள் வீட்டின் பின்புறமாகவுள்ள ஜன்னலை உடைத்து அதன் கம்பியை வளைத்து உள்ளே நுழைந்துள்ளனர். வேலாயுதத்தின் மனைவியையும் அவரது உறவினரையும் கட்டிவைத்துவிட்டு, வேலாயுதம் மீது ரீப்பைக் கட்டையால் தலையில் இரு தடவைகள் தாக்கியுள்ளனர். இதன்போது அவரது மண்டையோடு உடைந்து குருதிக்கசிவு ஏற்பட்டு அவர் நிலத்தில் சரிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

பின்னர் வீட்டில் சல்லடைபோட்டு 15 பவுண் நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துவிட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர். நீண்ட நேரத்தின் பின்னரே வேலாயுதத்தின் மனைவி மற்றும் அவரது உறவினர் இருவரும் தமது கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு, உடனடியாக வீட்டுக்கு அருகிலுள்ள கடைக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அவர்கள் பொலிஸாருக்கு தகவலைத் தெரியப்படுத்தியதையடுத்து, உடனடியாக அங்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரியும் நேரில் சென்று பார்வையிட்டார். முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவும் நேரில் சென்று ஆராய்ந்துள்ளார். நெடுந்தீவில் முதியவர்கள் 6 பேர் கொல்லப்பட்டு சில நாள்களிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.5,19)

## சிவராம்,...

ஊடகவியலாளரான தராகி என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து வெள்ளைவானில் வந்த இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜிவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்தவேளை கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20)

## நாணய...

பிரேரணைக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 25 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

மேற்படி பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடந்த இரு நாள்களாக விவாதம் நடைபெற்றுவந்த நிலையில், நேற்றும் விவாதம் தொடர்ந்தது. விவாதத்தின் முடிவில், பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு அவசியம் என ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்கமைய பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது பிரேரணைக்கு ஆதரவாக பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட அரச பங்காளிக்கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன. அத்துடன், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அநுரபிரியதர்ஷன யாப்பா அணியும் ஆதரவாக வாக்களித்தது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, 6 காரணங்களை முன்வைத்து வாக்கெடுப்பில் பங்கேற்பதை தவிர்க்க சபையில் இருக்கவில்லை. எனினும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பௌஸி, வாக்கெடுப்பின்போது பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து அதிர்ச்சிவைத்தியம் கொடுத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சபையில் இருக்கவில்லை. சுதந்திரக் கட்சியும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. அத்துடன், ஜே.வி.பி., டலஸ் அணி, விமல் அணி என்பன பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன. (அ-ம-44)

## ஈழத்தமிழர்களுக்குத்...

பேராசிரியர் ராமசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழர்களுக்கான கண்ணியமான அரசியல் தீர்வு தொடர்பில், ஏற்கனவே மலேசியாவின் பினாங்கில் நடைபெற்ற சர்வதேச தமிழ் மாநாட்டில் 'ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குப் பொதுவாக்கெடுப்பு' என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. இந்த முன்மொழிவு 2015ஆம் ஆண்டின் பினாங் பிரகடனம் என்று அழைக்கப்படுகிறது. தமிழர்களுக்கான வாக்கெடுப்பு, தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பான தீர்வுக்காக சர்வதேசத்துக்கு ஒரு வழியை வழங்குகிறது.

ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரே, தமிழர்களின் விடுதலை தாகத்தைத் தீர்ப்பதற்கு மிகவும் ஜனநாயகத் தன்மை வாய்ந்த மாற்றுத் தீர்வு முன்வைக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு பொதுவாக்கெடுப்பின் மூலம் தீர்வு என்ற கருத்தை உலகத் தமிழ் மாநாடுகள் முன்வைத்துள்ளன. ஜனநாயகம், சமாதானம் மற்றும் நீதி ஆகிய சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்கவே இத்தகைய முன்னோக்கிய வழிகள் அடையாளப்படுத்தப்பட்டன.

ஸ்கொட்லாந்து அல்லது கியூபெக் போன்ற பிற நாடுகளுக்கு வாக்கெடுப்பு நடத்தப்படுமானால், நீண்டகாலமாக ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு வாக்கெடுப்பு அரசியல் வழியாக இருக்கமுடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. கொடூரமான தமிழ் இனப்படுகொலை நடந்து [illegible] வருடங்கள் கடந்தும், ஈழத்தமிழர்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலைக்காக சர்வதேச சமூகத்தின் மூலம் உறுதியான பதில் எதுவும் வெளிவரவில்லை. இந்தநிலையில் தமிழர்களின் விடுதலைக்கான கண்ணியமான ஜனநாயகத் தீர்வு என்பது ஜீரணிக்க கடினமான ஒன்றாக இருக்கின்றதா? என்று கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை...

தகவல் தற்போது வெளியாகியுள்ளது. மேற்படி நால்வரும் தடுத்துவைக்கப்பட்டுள்ள அறையிலிருந்து சாந்தன் எழுதிய கடிதமொன்று தற்போது வெளிவந்துள்ளது. அந்தக் கடிதத்திலேயே சிறை வாழ்வைவிடவும் மோசமான வாழ்வை அவர்கள் தற்போது அனுபவித்து வருகின்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

உலகப்பிரபலம் ஒருவரின் கொலைச் சதியில் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட நிரபராதிகளான எமது குரல் ஓரங்கட்டப்பட்டு தண்டனையும் அறிவிக்கப்பட்டது. செங்கொடி உள்ளிட்ட தமிழ்நாட்டின் பெரும்பாலான தலைவர்களினதும், மக்களினதும், இந்தியா முழுவதுமுள்ள மனித உரிமைகள் ஆர்வலர்களினதும் போராட்டங்களைத் தொடர்ந்து எமக்கு விடுதலை கிட்டியுள்ளது. விடுதலையின் பின்னர் கடந்த ஐந்து மாதங்களாக திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளேன். இங்குள்ள 120 பேரில் 90 பேர் இலங்கையர்கள். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு இங்கில்லை. சட்டவிரோதக் குடியேறிகள் அவ்வளவுதான். ராஜீவ் காந்தி கொலைவழக்கில் இருந்து விடுதலையான நாங்கள் நான்கு பேரும் (இலங்கையர்கள்) தகரத்தால் ஜன்னல்கள் அடைக்கப்பட்ட மிகச் சிறிய இரண்டு அறைகளுக்குள் முடக்கப்பட்டிருக்கின்றோம். றொபேட் பயஸ், ஜெயக்குமார் ஓர் அறையிலும், முருகனும், நானும் இன்னொரு அறையிலும் அடைக்கப்பட்டுள்ளோம். இந்த இரு அறைகளும் அருகருகே இல்லை. ஒருவரை மற்றொருவர் சந்தித்துக் கதைக்க முடியாதவாறு கட்டுப்பாடுகள்.

சதிகாரக் கைதியாக விலங்கிடப்பட்டிருந்தபோது ஏக்கர் கணக்கான நிலப்பரப்பில் நடமாட அனுமதிக்கப்பட்டிருந்தேன். இப்போது சூரிய வெளிச்சம் உடலில் படமுடியாதவாறு ஓர் அறை மட்டுமே உலகமாக்கப்பட்டுவிட்டது. இங்கு தொலைபேசி வசதி இல்லை. இரத்த உறவுகளை மட்டுமே சந்திக்கமுடியும். வெளிநாட்டவரான எமக்கு இங்கு யார் இரத்த உறவுகள்? எமது சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர், உள்துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்குக் கடிதம் எழுதினேன். எந்தப் பதிலும் இல்லை. ஈழத்தமிழர்களும், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் எங்களுக்காகக் குரல்கொடுக்கவேண்டும் என்று வேண்டுகின்றேன். 32 ஆண்டுகளாக அம்மாவைப் பார்க்கவில்லை. அப்பாவின் கடைசிக்காலத்தில் அவரின் அருகிலிருந்து கடமைகளைச் செய்யவில்லையே என்ற உறுத்தல் என்னை நெருடுகின்றது - என்றுள்ளது. (அ-ம)

## தொல்பொருள்...

ஆலய நிர்வாகத்தினரிடம், புதிய விக்கிரகங்களை வைக்கவேண்டாம் என்றும் ஏற்கனவே இருந்த சிலைகளை வைக்குமாறும் வலியுறுத்தியுள்ளனர். இதற்கு ஆலய நிர்வாகத்தினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'முன்னர் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்கள் முழுமையாக உடைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய விக்கிரகங்கள், களவாடப்பட்டுள்ளன. உடைந்த சிலைகளை மீண்டும் எப்படி வைக்கமுடியும்? எமது சமய வழக்கத்தின்படி அது முறையான செயற்பாடு அல்ல' என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இதனால் அதிகாரிகளுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து சென்றனர். பொலிஸார் தொடர்ந்தும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். சிலைகளை மீள்பிரதிஷ்டை செய்வதற்கு வந்திருந்தோரைப் பதிவுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர். ஊடகவியலாளர்களின் விவரங்களும் பதிவு செய்யப்பட்டன. இதற்கு இளைஞர்களும், ஆலய நிர்வாகத்தினரும் கடும் கண்டனம் தெரிவித்தனர். 'நீதிமன்றம் இவ்வாறான பதிவு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தவில்லை' என்று அவர்கள் தெரிவித்தனர். எனினும், அந்தக் கருத்துக்களைப் பொருட்படுத்தாமல் பொலிஸார் தொடர்ந்து பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (அ-ம-110)

# அதிவேக வீதிகளின் கட்டணம் அதிகரிப்பு

*வர்த்தமானி வெளியீடு*

கொழும்பு, ஏப். 29

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் அறவிடப்படும் நுழைவுக் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு விசேட வர்த்தமானி நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார். அதற்கமைய தற்போதுள்ள கட்டணம் 25 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கசிப்புடன் இளைஞன் நிலாவரையில் கைது!

யாழ்ப்பாணம் -அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவரைப் பகுதியில் கசிப்புடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட ரோந்து நடவடிக்கைகளில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞனை சோதனையிட்டபோது கசிப்பு வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

அதனையடுத்து இளைஞன் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 500 மில்லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-125)


## பணியாளர் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கணக்காளர் நிறுவனத்திற்கு உதவி கணக்காளர், கணக்கியல் பயிலுனர்கள் மற்றும் சுத்திகரிப்பு தொழிலாளி தேவை.

தொடர்பு: 074 2622 732

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி A-09 வீதியில் இரண்டாம் காணி 08 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ குடியிருப்பு உள்ள சூழல்
- ✓ நன்னீரூற்று சூழல்
- ✓ 1 பரப்பின் விலை 650,000/= ரூபா மட்டும்.

076 4365 814, 077 0654 525

(CS 24646)A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:-076 755 8606 077 638 5683

## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.


நிலப்பரப்பு

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நன்னீரூற்று
* குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணி களும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)



தொடர்பு:

077 4683 354

076 9119 371

076 7390 413


# பழுதடைந்த குமிழ்களை நீக்கி புதிய விளக்குகள் பொருத்துக!

*சாவ. வரியிறுப்பாளர் கோரிக்கை*

சாவகச்சேரி, ஏப். 29

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்து காணப்படும் வீதி விளக்குகளுக்கு பதிலாக புதிய விளக்குகளை பொருத்துமாறு நகர சபையிடம் வரியிறுப்பாளர்கள் முறையிட்டுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து பழுதடைந்த மின்குமிழ்களுக்குப் பதிலாக புதிய குமிழ்கள் பொருத்தும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. தற்போது தடைகள் நீக்கப்பட்டு ஏனைய சபைகளால் வீதிவிளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர்கள் சுட்டிக்காட்டினர். இதுதொடர்பில் சாவகச்சேரி நகரசபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

கடந்த வருட வரவு - செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டில் மின்குமிழ்களைக் கொள்வனவு செய்து பொருத்துமாறு மின்சாரசபைக்கு அறிவித்துள்ளோம்.

ஒத்துழைப்புக் கிடைத்ததும் விரைவில் பழுதடைந்த மின்விளக்குகளை அகற்றி புதிய மின்விளக்குகள் பொருத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-9)

# நயினாதீவுக்கு 300 மெகாவாட்ஸில் புது மின்பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், ஏப். 29

நயினாதீவு பிரதேசத்தில் பழுதடைந்திருந்த மின்பிறப்பாக்கிக்கு பதிலாக சுமார் 300 மெகாவாட்ஸ் உற்பத்தித்திறனுள்ள புதிய மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபையால் இந்த மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் நயினாதீவுக்கு 24 மணிநேர மின்விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நயினாதீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

# பொங்கல்


யாழ்ப்பாணம், ஏப். 29

சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ 1008 பானைப் பொங்கல் விழா இன்று இடம்பெறவுள்ளது. சீரணி ஆலய வீதியில் இன்று பி.ப. 2 மணிமுதல் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த (30.03.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை நகுலேஸ்வரன்



தோற்றம் 29.11.1948

மறைவு 30.03.2023

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (29.04.2023) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கரவச்சை,
கணேஸ்வரம்,
அளவெட்டி வடக்கு.

குடும்பத்தினர்


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 8147 389

077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.

தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 8147 389

077 9865 457

(CS 24650)A-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org